## சுருக்கம்

மாற்றுத் திறனாளிகள் நலன் – மாற்றுத் திறனாளிகளுக்கான சுயவேலை வாய்ப்புத் திட்டம் – அரசு மான்யம் வழங்குதல் – 2010–2011 ஆம் ஆண்டுக்கான திட்டத் தொடராணை மற்றும் ரூ. 30.00 இலட்சம் செலவினம் ஒப்பளிப்பு – ஆணை வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நல (மா.தி.ந. 2)த் துறை

அரசாணை (நிலை) எண். 35 நாள்:01–07–010

ஆனி 17, திருவள்ளுவர் ஆண்டு 2041

படிக்க:

1. அரசாணை (நிலை) எண்.181, சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத்துறை, நாள் 05–08–2005.
2. அரசாணை (நிலை) எண்.135, சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத்துறை, நாள் 05.10.2009.
3. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கடித எண்.5420/ஊம. 3.1/08, நாள் 2.6.2010.

--------

**ஆணை:**

மாற்றுத் திறனாளிகளுக்கு சுயவேலைவாய்ப்பு வழங்கும் திட்டத்தின் கீழ் சுயவேலை வாய்ப்பு புரிய விரும்பும் மாற்றுத் திறனாளிகளுக்கு தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் கடனுக்கு பரிந்துரைக்கப்பட்டு, கடன் தொகை வங்கிகளினால் அளிக்கப்பட்டபின், கடன் தொகையில் மூன்றில் ஒரு பங்கு அல்லது அதிகபட்சமாக ரூ.2,000/– இதில் எது குறைவோ அது அரசு மானியமாக வழங்கப்பட்டு வந்தது.

2. மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், 2005–2006ம் ஆண்டு பகுதி-II திட்டத்தின் கீழ் சுயவேலை வாய்ப்புக்கான கடன் தொகை மானியம் ரூ.2,000/– லிருந்து ரூ.3,000/– ஆக உயர்த்தப்பட்டது. மேலும் பயன்பெறுவோர் எண்ணிக்கையும் 875–லிருந்து 1000 ஆக உயர்த்தப்பட்டது. மேலே 2ல் படிக்கப்பட்ட அரசாணையில் 2009–2010 ஆம் ஆண்டில் இத்திட்டத்தினை தொடரவும் இதற்கென ரூ.30.00 இலட்சம் செலவினம் மேற்கொள்ள அனுமதியளித்தும் அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. மேலே 3ல் படிக்கப்பட்ட கடிதத்தில் இத்திட்டத்தை 2010–11ம் ஆண்டில் தொடரவும் இதற்கென ரூ. 30.00 இலட்சம் செலவினம் மேற்கொள்ளவும் ஆணை பிறப்பிக்குமாறு மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை ஏற்று 2010–2011ம் ஆண்டு இத்திட்டத்தை தொடர்ந்து செயல்படுத்தவும், இத்திட்டத்தின்கீழ் குறைந்தபட்சம் 1000 நபர்கள் பயனடையதக்க வகையில் நபர் ஒருவருக்கு ரூ. 3,000/–க்கு மிகாமல் மானியம் வழங்கும் பொருட்டு ரூ.30.00 இலட்சம் (ரூபாய் முப்பது இலட்சம் மட்டும்) செலவினம் மேற்கொள்ள நிதி ஒப்பளிப்பு செய்தும் அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

"2235 சமூகப் பாதுகாப்பும் நலனும் – 02 சமூக நலன் –101. மாற்றுத் திறனாளிகள் நலன் – பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப்பணிகள் – II. மாநில திட்டம் – JV மாற்றுத் திறனாளிகளுக்கான சுயவேலை வாய்ப்பு – 70 வேலை வாய்ப்பின்மை நிவாரணம். (து.தொ.கு.2235 02 101 JV 7009)"

5. மேலே பத்தி 3–ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை காலாண்டு கட்டுப்பாட்டு நிதியொதுக்கதிற்கு.பட்டு (Quarterly control of Appropriation) பெற்று வழங்கிட மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது. 2010–2011 மற்றும் முந்தைய ஆண்டுகளில் மாற்றுத் திறனாளிகளுக்கு சுயவேலை வாய்ப்புக்கென வழங்கப்பட்ட உதவித் தொகையில் பயனாளிகள் சுயவேலை வாய்ப்பு மூலம் தொழில் செய்வதற்காக சொத்துகள் ஏற்படுத்தப்பட்டுள்ளனவா என்பதை உறுதி செய்து கொள்ளும்படி மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண். நிதி (சமூகநலம்)/32613/10, நாள் 29.6.2010ல் கண்டுள்ள ஒத்திசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சோ.சு. ஜவஹர்,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–6.
அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள் (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–5/9/35.
தலைமைக் கணக்காயர், சென்னை–18/35
தலைமக் கணக்காயர், சென்னை– 18/35 (பெயரில்)

**நகல்:-**
நிதி (சந) துறை, சென்னை–9.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
செயலாளர் (மா.திந. துறை) அவர்களின் தனிச் செயலாளர், சென்னை–9.
மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, அனைத்துப் பிரிவுகள்.
இருப்பு கோப்பு/உதிரி

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.